**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 40** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | சாந்தி |
| Father's / Husband Name | : | பாலன் |
| Village | : | 18பி, கிருஷ்ணன்கோவில் தெரு. தெற்கு வீதி, அய்யபேட்டை. பாபநாசம் தாலுக்கா |
| Taluk | : | தஞ்சாவூர் மாவட்டம் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2018 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of** **30.07.2018**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.கண்ணகி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, தட்டச்சர் ச.சுரேஷ்**

**CC513/2004** Date: 30.07.2018

முதல் விசாரணை

நான் 18பி, கிருஷ்ணன்கோவில் தெரு. தெற்கு வீதி, அய்யபேட்டை. பாபநாசம் தாலுக்காவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசாரி வேலை செய்து வருகிறேன். அசா1ஐ தெரியாது. ஆஜர் 1வதுஎதிரியை தெரியும். 3ஆம் எதிரி லோகநாதன் என்பவரை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 1999ஆம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை. நகை சீட்டு கட்டுவதற்காக மாதம் ரூ.150ஐ தஞ்சாவூரில் உள்ள கணபதி என்பவரின் நகை கடையில் செலுத்தி வந்தேன். மொத்தம் 5மாத, மாததவணைகளில் செலுத்தி வந்தேன். பின்னர் என்னால் தொடர்ச்சியாக பணம் கட்ட முடியவில்லை. பின்னர் கணபதி என்பவரிடம் சென்று கட்டிய தொகையை திரும்ப கேட்டேன். 25மாதங்கள் முடித்துதான் பணத்தை திருப்பி தருவதாக கூறினார். 25மாதங்கள் கழித்து சென்று பார்த்தேன் கடை பூட்டியிருந்தது. என்னிடம் காட்டப்படும் காமதேனு தங்க நகை திட்டத்தின் கீழ் நான் செலுத்திய 5மாத தவணை பாஸ்புக் என்னுடையதாகும். அது சா.பொ.80ஆகும். பின்னர் 2முறை சென்று பார்த்தேன் கடை திறக்கவில்லை. இது சம்மந்தமாக தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவில் புகார் அளித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

காவல்நிலையத்தில் நான் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்தேன். நான் எனது முன் விசாரணையில் சொன்னவாறு கணபதி என்பவர் கடையில் நகை சீட்டு கட்டவில்லை என்றாலும், சா.பொ.80 இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லையென்றாலும், வழக்கிற்காக முன் விசாரணையில் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.நான் 1999ஆம் ஆண்டிற்கு பிறகு மேற்படி நகைக்கடைக்கு செல்லவில்லை.

மறுவிசாரணை

இல்லை.